**தலைப்பு 202 – முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என அறிவிக்க முடியாதிருந்தது.

(ஆ) முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு உரியதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுடனான இணங்காமைகள்

மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கிணங்க தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட அனைத்து புள்ளிவிபரவியல் தகவல்களுக்காகவும் முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு தொகைகள் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டின ஒப்பீட்டு தொகைகள் | நிதிககூற்றுக்களின் ஒப்பீட்டுத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக ஒப்பீட்டு தொகைகளை சரியாக காண்பிக்கப்பட வேண்டியமை. | இணங்குகின்றேன். 2017 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு தொகைகளை உள்ளடக்க முடியவில்லை. |

காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.2 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

---

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மேற்படி சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் திறைசேரி அச்சீட்டு குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கைகளுடன் இணங்க வேண்டிய போதிலும், கட்டிட கிரயமாக ரூபா 312,485,000 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி அச்சீட்டு குறிப்புகளில் கட்டிட கிரயம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய சரியான நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். கைத்தவறுதலொன்றாக அந்த மீதியை கணனிமயப்படுத்த முடியாதுள்ளது. அந்த பெறுமதி 2019 கணக்குகளில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) | 7(ii) பந்தியின் பிரகாரம் ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்படும் வருமானங்கள் திறைசேரியிடமிருந்து பெற்ற கட்டுநிதியாக கருதி கணக்கு வைக்கப்பட வேண்டும். எனினும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக சேகரித்த ரூபா 2,626,292 தொகை திறைசேரியிலிருந்து கிடைத்த வருமானமாக கணக்கு வைப்பதற்கு பதிலாக வரியல்லாத வருமானம் மற்றும் ஏனை பெறுவனவுகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய சரியான நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். கைத்தவறுதலொன்றாக "வரியற்ற வருமானம் மற்றும் ஏனைய" நிரலின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டின் போது "வருமானமல்லாத பெறுவனவுகள்" நிரலின் கீழ் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 7(iv) பந்தியின் பிரகாரம் நிதி நிலமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிக்கு ஒப்பான பெறுமதியொன்று தேறிய சொத்துக்கள் / மூலதனத்தின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தொகுதியாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தொகுதி ரூபா 9,704,978 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய சரியான நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது அந்த நிலமையை திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். |
| (ஈ) | 7(v) பந்தியின் பிரகாரம் முற்பணக் கணக்கு பெறுமதியில் வைப்புக் கணக்குகளின் பெறுமதியினை குறைத்து தேறிய சொத்துக்களின் பெறுமதி கணிப்பிடப்பட வேண்டிய போதிலும், அதற்கமைய திணைக்களத்தின் தேறிய சொத்துக்கள் ரூபா 8,837,839 ஆன மறைப்பெறுமதியினை கொண்டிருக்க வேண்டிய போதிலும், ரூபா 867,139 ஆன நேர்ப் பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய சரியான நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். |

## 1.6.3 நிதி நிலமைக்கூற்று

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் 2018 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 4,599,297 ஆன போதிலும் 2017 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அது ரூபா 4,335,658 ஆனமையால் ரூபா 263,639 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சரியான மீதிகளை பயன்படுத்தி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | இணங்குகின்றேன். திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். |

## 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

---------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | | |
| | ----------------- | ------------------------------ | ---------------------------------------- | ------------------------------------------ |
| (அ | நிதிப்பிரமாணம் 237 | திணைக்களத்தினால் ரூபா 310,316 கூட்டுத்தொகையான பொருட்கள் மற்றும் 9 பணி விடயங்களுக்காக அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளமையை மற்றும் பொருட்களை கிடைத்தமையை உறுதி செய்யாது கொடுப்பனவு மேற்கொள்ப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மற்றும் பண்டங்களின் விநியோக பணிகள் திருப்திகர்மான மட்டத்தில் நிறைவேற்றப்பட்டமையை உறுதி செய்யப்பட்டமையின் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியமை. | களஞ்சியப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டு உரிய முத்திரை கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் பொறிக்கப்பட்டிருந்ததுடன், அதில் குறைபாடுகள் உள்ளதென்பதை ஏற்றுக்கொள்கின்றேன். அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவிக்கின்றேன். |
| (ஆ | நிதிப்பிரமாணம் 264 | திணைக்களத்தினால் ரூபா 880,000 கூட்டுத்தொகையான 8 கொடுப்பனவுகளுக்காக | பங்களிப்பாளர்களிடமிருந்து பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்பட | திணைக்களத்தினால் பிரதேச ரீதியாக இணைப்பு செய்யப்பட்டுள்ள |

| | | |
|---|---|---|
| பணம் கிடைத்ததாக பங்களிப்பாளர்களிடமிருந்து பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வேண்டியமை. | அபிவிருத்தி உத்தியோகத்தரிகளினுடாக ஒவ்வொரு கொடுப்பனவிற்காகவும் அதன் பெறுமதிக்கு பற்றுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்கு குறித்து வைத்துக்கொள்கினறேன். |

**2. நிதி மீளாய்வு**

-----------------------

**2.1 செலவின முகாமைத்துவம்**

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| திணைக்களத்தினால் 4 செலவின விடயங்களுக்காக மற்றும் 4 மூலதன செலவின விடயங்களுக்காகவும் தேவையான மொத்த நிதியேற்பாடாக ரூபா 50,200,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 20,256,014 அல்லது 6 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய தேவைப்பாடு உரிய முறையில் எதிர்வுகூறப்பட வேண்டியதுடன், நிதி உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். | இணங்குகின்றேன். 2018 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தில் திறைசேரியிலிருந்து போதியளவான கட்டுநிதி கிடைக்காமை மற்றும் ஆண்டினுள் அமைச்சு மாற்றமடைந்தமையின் அடிப்படையில் சில பெறுகைகள் உரிய திகதிகளில் மேற்கொள்ள முடியாமை இந்த சேமிப்பிற்கு காரணமாக அமைந்திருந்தது. |

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்**

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| இரண்டு செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட | மீளாய்வாண்டிற்குரிய பொறுப்புகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு | இணங்குகளின்றேன். பட்டியல்கள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பின்னர் |

| | | |
|---|---|---|
| பொறுப்புகளின் பெறுமதி ரூபா 189,810 ஆன போதிலும், 2019 ஆம் ஆண்டின் செலவினப் பேரேட்டின் பிரகாரம் ரூபா 307,382 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், அந்த 2 செலவின விடயங்களுக்குரிய மீளாய்வாண்டிற்குரிய சேமிப்பு ரூபா 215,940 ஆகும். | ஏற்படுத்தப்பட்ட பொறுப்புகளின் எல்லையினுள் எதிர்வரும் ஆண்டிற்கான பொறுப்புகள் தீர்க்கப்பட வேண்டியமை. | சமர்ப்பிக்கப்பட்டமையால் சரியான பொறுப்புகள் கணக்குகளில் குறிப்பிட முடியாதிருந்தமை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------------

**3.1 திட்டமிடல்**

--------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், திணைக்களத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த சட்டவாக்க நிதியமொன்றான முஸ்லிம் தரும உதவி நிதியம் மற்றும் சட்டவாக்கமற்ற நிதியமொன்றான ஹஜ் நிதியம் என்பவற்றுக்கான செயல்நடவடிக்கை திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய செயல்நடவடிக்கை திட்டமொன்றினை தயாரித்து ஆக்கபூர்வமாக அந்த பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இணங்குகளின்றேன். 2019 ஆம் ஆண்டின் போது ஹஜ் நிதியம் மற்றும் முஸ்லிம் தரும உதவி நிதியம் ஆகியவற்றுக்காக செயல்நடவடிக்கை திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளது. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் திறைசேரி மானியங்களை பயன்படுத்தி புகையிரத திணைக்களத்திற்குரிய காணியொன்றில் திணைக்கள கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த காணிகளை திணைக்களத்தின் பெயரில் கையேற்று நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிலு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுவீகரிப்பு நடடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியமை. | சுவீகரிப்பு நடடவடிக்கைகளில் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பணிகளுக்காக முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வாறு உள்ளது. |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) முஸ்லிம் தர்ம நிதியம்<br>---------------------------------------<br>(i) பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசலொன்று தர்ம நம்பிக்கைப் பொறுப்பின் வருடாந்த தேறிய வருமானத்தில் 6 சதவீத அளவொன்றும் முஸ்லிம் பள்ளிவாசலொன்றின் வருடாந்த தேறிய வருமானத்தில் 10 சதவீதம் முஸ்லிம் தர்ம நிதியத்திற்காக வழங்கப்பட வேண்டுமென | பங்களிப்பு பணம் கிடைப்பதை உறுதி செய்வதற்காக உரிய நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு பிரதேச கலாச்சார உத்தியோகத்தர்களால் அவை மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | இணங்குகின்றேன். அரச கணக்குகள் சபையின் பரிந்துரையின் பிரகாரம் கடந்த வருடத்தின் இறுதி காலாண்டு முதல் அனைத்து பள்ளிவாசல்களினதும் தகவல்களை கணனிமயப்படுத்தும் முறையான வேலைத்திட்டமொன்றினை தயாரித்து அதற்குரிய பணிகள் தற்போது நடைமுறைப்படுத்தப் பட்டவாறு உள்ளது. |

| | | |
|---|---|---|
| வக்ப் சட்டத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 43(2) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பள்ளிவாயல் மற்றும் சமய நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த பணம் முஸ்லிம் தர்ம நிதியத்திற்கு கிடைத்ததா என்பன பரீட்சிக்க பொருத்தமான நடைமுறையொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை. | | |
| (ii) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் சட்ட ரீதியான மற்றும் பொறுப்பு நிதியத்திற்காக நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செலவிடப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இணங்குகின்றேன். 2019 ஆம் ஆண்டின போது உரிய பாதீடுகள் தயாரிக்கப்பட்டு பொதுத் திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

(ஆ) ஹஜ் நிதியம்

| | | |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம சட்டரீதியற்ற நிதியங்களை மூடிவிடுவதற்கு அல்லது தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அவ்வாறான நிதியத்தை பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இந்நிதியத்திற்காக இதுவரை சட்டரீதியான அடிப்படையொன்று காணப்படவில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் பிரகாரம் நிதியங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இன்றளவில் தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சினால் ஹஜ் அதிகாரச்சட்ட வரைபொன்று தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பிற்குரிய பணிகள் தொடர்பில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை அடைவதற்குரிய | திணைக்களத்திற்குரிய நோக்கங்களை இனங்கண்டு, அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான இலக்குகள் நிறுவப்பட்டு அந்த இலக்குகளை அடைவதனை அளவிடுவதற்கு குறிகாட்டிகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டிற்குரியதாக அந்த குறிகாட்டிகளை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |

அடைவுகளும் இலக்குகளின் அடைவினை அளவிடுவதற்கான குறிகாட்டிகளையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அந் திகதியில உள்ளபடியான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 123, உள்ளபடியான பதவியணியான 90 ஆனமையால் 33 வெற்றிடங்கள் நிலவின. மேலும், திணைக்களத்தினால் ஆளணி செலவின தொகுதிக்காக ரூபா 44.96 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், வருடாந்த நபரொருவருக்கான செலவினம் ரூபா 510,726 ஆக இருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு அரச நிர்வாக அமைச்சிற்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. |